**கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்தின் கீழ் செயற்படும் போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி - 2023**

---

கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்தின் கீழ் செயற்படும் போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஒக்தோபர் 28 ஆம் திகதிய 3425 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 04.03(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது.

முன்னுரிமை போக்குவரத்துச் செயற்திட்டங்களின் தயார்நிலையை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். களனிப்பள்ளத்தாக்கு புகையிரத பாதை மேம்படுத்தலை வடிவமைப்பதற்கான மதியுரை சேவைகளை வழங்குதல் எனும் பெயரிலான ஒரு கூறின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,654.54 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 11.36 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 1,456.50 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 9.99 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் (ஏடிபீ) நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 198.04 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோபர் 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்திற்கான கடன் முடிவடையும் திகதி 2024 யூன் 30 வரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியம இல. 01 இன் பிரிவு இல. 27 இன் பிரகாரம், நிறுவனம் நிதி அறிக்கையை அட்டுறு அடிப்படையில் தயாரிக்க வேண்டும். முழு செயற்திட்டத்திற்கான உண்மையான வட்டிக் கிரயம் ரூபா 232.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 609,455 ஆகவும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வட்டிக் கொடுப்பனவு ரூபா 190.68 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 498,970 ஆகவும் இருந்ததால் மீளாய்வாண்டில் ரூபா 42.22 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110,485 ஆக இருந்த செலுத்த வேண்டிய வட்டி பெறுமதி நிதி நிலைமைக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 42.22 மில்லியன் | 2023 ஆம் ஆண்டில் கடன் வட்டி கணக்கீட்டிற்காக PAM இல் எந்த ஒதுக்கீடும் வழங்கப்படவில்லை என்ற உண்மையின் காரணமாக, 2023 ஆண்டு வருடாந்த செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் இது வெளிப்படுத்தப்படவில்லை. மேலும், செயற்திட்டத்தின் கடன் காலப்பகுதி 2023.06.30 அளவில் காலாவதியாகியிருந்ததால் எதிர்காலத்திலும் செயற்திட்டத்தால் கணக்கீடு செய்யப்படாத கடன் வட்டியைக் கணக்கீடுசெய்வதற்கு எந்த சட்டப் பின்னணியும் காணப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| | கூறு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் ஆலோசனை, சாத்தியவள ஆய்வு மற்றும் விரிவான | கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்தின் (CSRP) பிரதான நோக்கமானது அடுத்த 20 வருடங்களுக்கு தேசிய போக்குவரத்து முறைமைக்கான | செயற்திட்டம் தொடர்பான சாத்தியவள ஆய்வுகள் மற்றும் விரிவான திட்டமிடல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, இலங்கை | உரிய புகையிரத பாதையை விரைவில் அபிவிருத்தி செய்வதற்காக செயற்திட்டத்தை |

| | | | | |
|---|---|---|---|---|
| | வடிவமைப்பு. | அதன் பங்களிப்பை உறுதிப்படுத்துவதற்காக கொழும்பை அண்டிய பிராந்தியத்தில் இலங்கை புகையிரதத்தை அபிவிருத்தி செய்வதாகும். 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்திற்கு ரூபா 1,551.3 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 8.52 மில்லியனை ஏடிபீ ஏற்கனவே வழங்கியுள்ளதுடன் இந்த ரூபா 1,469 மில்லியனுக்கு சமமான வழங்கப்பட்ட தொகையின் 95 சதவீதமானது சாத்தியவள ஆய்வு மற்றும் விரிவான வடிவமைப்புக்கான ஆலோசனை சேவைகள், சிமார்ட் பயணச்சீட்டு செயற்திட்டத்திற்கான ஆலோசனை சேவை மற்றும் சர்வதேச புகையிரத செயற்பாட்டு நிபுணர்-ஹான்ஸ்க்கான ஆலோசனை சேவையாக செலுத்தப்பட்டுள்ளது. இச் செயற்திட்டம் தொடர்பான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, 2021 மார்ச்சில் வரிசை அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டு, 2 ஆண்டுகளுக்கு மேல் கடந்திருந்த போதிலும் அந்த அறிக்கைகளை புகையிரத முறைமையின் எதிர்கால அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படுவது மிகக்குறைவாகவே காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | புகையிரத திணைக்களம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் 2021 ஏப்ரல் 30 அளவில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இச் செயற்திட்டத்தின் பணிகள் மற்றும் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முடிவடைதல் செயற்திட்டப் பணிகளாக இனங்காணப்படுவதில்லை. | முறைப்படுத்துதல். |
| (ஆ) | கடன் வட்டி | உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தை பூர்த்திசெய்து 2022 திசெம்பர் 31 இல் கையளிப்பதற்கு முன்மொழியப்பட்டது, மேலும் செயற்திட்டம் அத் திகதியில் CSRP தொடர்பான ADB கடனைப் பயன்படுத்தியிருந்தது. எனினும், கடன் உடன்படிக்கையின் கீழ் வசதிகளைப் பெற்ற ஏனைய தரப்பினர் நிதியை | ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உடன்படிக்கையின் விதிமுறைகளின் பிரகாரம் செயற்திட்டம் முடிவடையும் திகதி வரை செயற்திட்டத்தின் கீழ் கடன் வட்டி செலவினம் கணக்கீடு செய்யப்படும். அதன் பிரகாரம் ஐ.அ.டொலர் 102,087.41 மீளாய்வாண்டில் கடன் வட்டியாக CSRP | செயற்திட்டக் கிரயங்களுக்கான திட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகள் ஒவ்வொரு கூறின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முழுமையாகப் பயன்படுத்தியிருக்காத காரணத்தினால், வட்டிக் கிரயம் தொடர்ந்தது. பணி நிறைவடைந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் செயற்திட்டத்திற்கு ஐ.அ.டொலர் 102,087.41 வட்டிக் கிரயம் அறவிடப்பட்டது. | செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது. | |
| (இ) | சிமார்ட் பயணச்சீட்டு மற்றும் இருக்கை முன்பதிவு முறைமை | கொழும்பை அண்டிய புகையிரத செயற்திறன் முன்னேற்ற செயற்திட்டத்தின் (CSREIP) கீழ் புகையிரத சேவைக்கான சிமார்ட் பயணச்சீட்டு மற்றும் இருக்கை பதிவுசெய்தல் முறைமை தற்போது உப செயற்திட்டமாக அமுல்ப்படுத்தப்படுகிறது. அந்த உப செயற்திட்டத்திற்கான ஆலோசனை சேவைக் கட்டணமாக ரூபா 19 மில்லியன் கிரயமானது, அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்தால் (CSRP) ஏற்கப்பட்டது. 2021 செப்தெம்பர் 17 முதல் 03 வருடங்களுக்குள் இச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய போதிலும் உப செயற்திட்டம் எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைந்திருக்காததால் இந்த உப செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் பயனற்றதாகியிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது. | இந்த செயற்திட்டம் முறைமையை கொள்வனவு செய்வதற்கான கேள்வி ஆவணங்களைத் தயாரிப்பதற்கு சிமார்ட் பயணச்சீட்டு மற்றும் இருக்கை முன்பதிவு முறைமைக்கான ஆலோசனை சேவைகளைப் பயன்படுத்தியது. உரிய உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஆலோசகர்கள் உரிய பணிகளை முறையாக பூர்த்தி செய்து, கேள்வி ஆவணங்களைப் பயன்படுத்தி, கேள்விகள் கோரப்பட்டு, சர்வதேச போட்டி விலையின் (ICB) கீழ் ஒப்பந்ததாரர் தெரிவு செய்யப்பட்டு ஒப்பந்தம் நடைபெற்று வருகிறது. | இயன்றளவு விரைவில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்தல். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்தின் (CSRP) கீழ் களனி பள்ளத்தாக்கு புகையிரத பாதையை அபிவிருத்தி செய்வதற்காக களனி பள்ளத்தாக்கு புகையிரத பாதையில் வலது புறத்தில் (RoW) வசிக்கும் குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்கு வீட்டு அலகுகள் தேவைப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA) மற்றும் | | |

| | | | |
|---|---|---|---|
| | போக்குவரத்து அமைச்சு (MoT) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் களனி பள்ளத்தாக்கு புகையிரத பாதையின் விரிவாக்கம் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக ஏழு புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தை (MOU) செய்துகொண்டது. உடன்படிக்கையின் பிரகாரம், உடன்படிக்கை திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் தொடர்புடைய வீட்டு அலகுகள் பூர்த்திசெய்யப்பட்டு செயற்திட்டத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். | | |
| (அ) | ரூபா 5,412 மில்லியனிற்கு 1244 வீட்டு அலகுகளை கொள்வனவு செய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் (UDA) புரிந்துணர்வு விஞ்ஞாபனங்கள் (MOU) கைச்சாத்திடப்பட்ட போதிலும் நாவல கட்டம் 01 இலிருந்து 406 வீட்டு அலகுகள் மற்றும் நாவல கட்டம் 02 வளாகத்திலிருந்து 144 அலகுகள் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படாத காரணத்தினால் இன்னும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. நாவல கட்டம் 02 தொகுதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட 144 வீடுகளுக்கு 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 502 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது.<br><br>அந்த வீட்டு தொகுதி நிர்மாணப் பணிகளின் பௌதீக முன்னேற்றம் 80 சதவீதமாகவும், 39 சதவீதமாகவும் இருந்ததால் ஒப்பந்தம் செய்யப்பட்ட திகதியான 2024 மார்ச் 31 இல் அந்த வீட்டு அலகுகளை வழங்க முடியவில்லை. | 2024 பெப்ரவரி 29 இல் உள்ளவாறு வீட்டு அலகுகளின் நிர்மாண முன்னேற்றம் 89% ஆக உள்ளது. நாட்டில் நிலவும் மின்சார நெருக்கடி, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நாட்டில் நிலவும் மக்கள் போராட்டங்கள் காரணமாக நாட்களை நீடிப்பதற்கு இணங்கப்பட்ட காலப்பகுதியினுள் வீட்டு அலகுகளின் முன்னேற்றத்தை அடைந்துகொள்ள இயலாமையின் காரணமாக புரிந்துணர்வு உடன்படிக்கையை மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்பு செய்வதற்கான ஒழுங்கை மேற்கொள்வதற்கு UDA இற்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அக் காலப்பகுதியினுள் மீதமுள்ள 11% நிர்மாணப் பணிகள் பூர்த்திசெய்யப்படும் என நம்பப்படுகிறது. | திட்டமிட்டவாறு செயற்திட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நாவல கட்டம் 01 வீடமைப்புத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாலும், நிர்மாணத்தை மீளத் தொடங்கிய பின்னர் விலை வேறுபாட்டைச் சீர்செய்வதற்கு UDA முடிவு செய்திருந்ததாலும், 2024 சனவரி 03 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் ஒரு வீட்டு அலகின் விலை 5 மில்லியனிலிருந்து 10 மில்லியனாக அதிகரிக்கும் அபாயம் இருக்கும். | நாவல (கட்டம் 1) தொகுதினூடாக வழங்கப்படவிருந்த 406 வீட்டு அலகுகளை கையகப்படுத்துவதற்கு புரிந்துணர்வு விஞ்ஞாபனங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், UDA மற்றும் சம்பந்தப்பட்ட நிர்மாண கம்பனியுடனான சட்டச் சிக்கல் காரணமாக நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. 2023/08/10 இல் UDA அந்த வீடுகளை 2024 மார்ச் 24 இற்குள் வழங்க முடியாது என்றும், ரூபா 5 மில்லியன் தொகையை வழங்குவதற்கு | செயற்திட்டம் மீண்டும் தொடங்கப்பட்டு நிர்மாணக் கிரயத்தை குறைப்பதற்கு முகாமை செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இணங்கியிருந்த ஒரு வீட்டு அலகின் விலை வேறுபாட்டின் பிரகாரம் ரூபா 10 மில்லியனாக அதிகரிக்கும் என்றும் கூறியது.<br><br>மீள் கணக்கெடுப்பின் பிரகாரம் மாளிகாவத்தை முதல் பாதுக்க வரையிலான KV வரிசையில் மீள்குடியேற்றப் பணிகளை பூர்த்திசெய்வதற்கு இன்னும் 100 வீட்டு அலகுகள் மாத்திரமே தேவைப்படுகிறது. அதன் பிரகாரம் 406 வீடுகளில் 100 வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள விலைகள் தொடர்பில் அமைச்சு தீர்மானம் எடுத்ததன் பின்னர் உரிய வீட்டு அலகுகளைப் பெற்றுக்கொள்ளவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. | |
| (இ) | ஆரம்ப புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் பிரகாரம் வீட்டுத் தொகுதியின் நிர்மாணம் இணங்கப்பட்ட திகதியிலிருந்து 02 ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்யப்பட்டு செயற்திட்டம் ஒப்படைக்கப்பட வேண்டும். நிர்மாணத்தில் தாமதம் ஏற்பட்டதால், 2018 ஆம் ஆண்டிலிருந்து வீடமைப்பு செயற்திட்டங்களின் பூர்த்திசெய்தல் திகதி மூன்று முறை நீடிக்கப்பட்டு, புதிய புரிந்துணர்வு உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குடும்பங்களின் மீள்குடியேற்றம் மேலும் தாமதமாகி வருவது அவதானிக்கப்பட்டது; கொழும்பை அண்டிய புகையிரத முறைமையின் அபிவிருத்தியின் நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நெருக்கடி நிலைமை காரணமாக ஒப்பந்த காலப்பகுதி தொடர்ச்சியாக நீடிக்கப்பட வேண்டியிருந்ததுடன் மேலும் 06 மாதங்களால் பூர்த்திசெய்தல் திகதியை நீடிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | திட்டமிட்டவாறு செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |